# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **08/ந/2018**

ஆணை எண். **6/2018**

நாள் : **05/01/2018**

திரு எம். இராமசாமி,
மேட்டூர் அனை.

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி,
சேலம்.

– **எதிர் மனுதாரர்**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, பொன்னகர், கதவு எண்.2/293–ஏ, முகவரியில் வசிக்கும் திரு M. இராமசாமி அவர்களின் 02.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2018 அன்று பெறப்பட்டு, 08/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, பொன்னகர், கதவு எண்.2/293–ஏ, முகவரியில் வசிக்கும் திரு M. இராமசாமி என்பவர் தான் மேட்டூர் நகராட்சியில் பதிவுரு எழுத்தராகப் பணியாற்றி 31.10.2010 அன்று வயது மூப்பின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், தனக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகை ரூ.45,194/– உடன் வழங்க ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த மனு மற்றும் பிற ஆவண நகல்கள் பரிசீலிக்கப்பட்டன. சென்னை, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் தனது 07.07.2017 நாளிட்ட கடித எண்.34660/2016–ல் மனுதாரரின் ஓய்வூதிய கருத்துரு பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கியுள்ளார். எனவே, மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வூதிய பலன்கள் மற்றும் சேமநலநிதிக்கான வட்டித் தொகை ஆகியவற்றை வழங்குவதற்கான நடவடிக்கையை உடன்

மேற்கொள்ளுமாறு மேட்டூர் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இது சம்பந்தமாக மேட்டூர் நகராட்சி ஆணையரை தொடர்பு கொள்ளுமாறு மனுதாரருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 5–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   மேட்டூர் நகராட்சி,
   சேலம்(இணைப்புடன்).

2. திரு எம். இராமசாமி,
   கதவு எண்.2/293 ஏ, பொன்னகர்,
   மேட்டூர் அணை– 1.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி